14th August 1963]

* 152 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any suggestion has been received from the Union Government for introducing control measures for ensuring equitable distribution of cement;

(*b*) whether those suggestions have been acted upon ; and

(*c*) whether a copy of the rules governing the distribution of cement will be placed on the table of the House?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) to (*c*) : With reference to the suggestion of the Government of India, this Government have introduced permit system of distribution of cement. The question of issuing cement control order under the Industries (Development and Regulation) Act, 1951 is under consideration. A copy of the order will be placed on the Table of the House when finalised.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், சிமெண்ட் பர்மிட் கொடுக்கும் வேலை தாலூகா ஆபீசில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே தாலூகா ஆபீஸ் வேலை பாதிக்கப்படுகின்ற காரணத்தால் சிமெண்ட் பர்மிட் கொடுக்கும் வேலையைக் கவனிப்பதற்காகத் தனியாக ஒரு அதிகாரியை நியமித்து சரியாகக் கண்காணிக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது சிமெண்ட் பர்மிட் கொடுக்கும் பொறுப்பை தாலூகா காரியாலயங்களில் கொடுத்திருப்பதற்கு காரணமே ஸ்தலத்தில் இருக்கக் கூடிய பொதுமக்கள் சிமெண்ட் வேண்டுமென்று கேட்கும்போது அதை நன்றாக ஆராய்ந்து உண்மையிலேயே தேவையா என்று தெரிந்து கொடுக்கப்பட வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான். இதற்கு விசேஷ அதிகாரி போட்டால் இன்னும் அதிகச் சிக்கல் ஏற்படும் என்பது அரசாங்கத்தின் கருத்து.

* 153 *Q*.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Works be pleased to state the quantity of cement required by Madras Government as additional allotment during 1962 and the actual additional allocation made?

THE HON. SRI V. RAMAIAH : The additional allotment sought for by this Government during 1962 was 50,000 tonnes and the allotment made was 24,000 tonnes.

திரு. கே. ஏ. மதியழகன் : நாம் கேட்டதற்குப் பாதிதான் கிடைத்திருக்கிறது. இதற்குக் காரணம் அவர்களுக்கு நம் மீது இருக்கிற அசிரத்தையா அல்லது அவர்களால் கொடுக்க முடியாத நிலைமையா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நமக்குக் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் தீவிரமாக நினைக்கக் கூடிய காரணத்தால்தான் நெருக்கடி இருக்கும்போது கூட நாம் கேட்ட அளவுக்குக் கொடுக்காவிட்டாலும் கணிசமான பங்கைக் கொடுத்திருக்கிறார்கள்.